Regd. No. M 5623 KURAL MALAR Thirukkural Tamil Weekly

'குறள் மலர்'
வெள்ளிதோறும் வெளிவரும்
கட்டண விவரம்

ஒரு ஆண்டுக்கு ரூ. 6-0
அரை ஆண்டுக்கு ரூ. 3-4
தனி இதழ் 2 அணு

விற்பனை உரிமைக்கு இதழுக்கு ஒரு ரூபாயாக முன் பணத்துடன் விண்ணப்பிக்க. 5க்குக் குறைந்து விற்பனை உரிமை இல்லை. பாக்கி இதழ் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படும். V. P. P. இல்லை.

குறள்மலர்

ஆசிரியர்:
திருக்குறள் வீ. முனிசாமி

திருவள்ளுவர் ஆண்டு 1982, தை 6
திருச்சி 19-1-51 வெள்ளி

மலர் 1 இதழ் 28

ஏன் மழைபெய்யவில்லை?

ஒரு நாட்டில் மழை பெய்யவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? ஆசிரியர் வள்ளுவனார் அருமையான காரணத்தினை அறிவுக்கேற்ப அமைத்துவைத்துக் கூறுகின்றார்.

உலகிற்கு வேண்டிய உயிர்ப்பொருள் மழைதான்! மக்கள் வாழ்ந்திருக்கவைப்பது மழைதானே! மழை பெய்யாதிருப்பதற்குக் காரணம், நாட்டுத் தலைவன்—மன்னன் — ஆட்சிமுறை— இவை நல்லமுறையில் இல்லையென்பதேயாகும்.

ஆட்சி ஒழுங்காக இருந்தால், ஆண்டவன் கருணைகூர்ந்து மழை பெய்யவிடுவான் என்றும், ஆட்சி முறையாக இல்லையென்றால் மழை பெய்யாது தடுத்துவிடுவான் என்றும் எண்ணுதல் பேதைமையாகும்.

முறையோடு ஆட்சி செய்யவேண்டும். ஆட்சி முறையில், அறிஞர்களுடன் கலந்து, பெரியார்களுடைய சொற்களைப் போற்றி, நுண்ணறிவுபெற்ற பேரறிஞர்களின் வழிமுறைகளைக் கண்டுணர்ந்து, அதற்கேற்ப நாட்டில் செய்யவேண்டிய முறைகளைச் செய்து ஆட்சிபுரிவானேயானால் பருவமழை ஒழுங்குறப் பெய்யுமாறு செய்யமுடியும் என்பதாம்.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

[மன்னவன் (முறை - ஆட்சிமுறைகளைக், கோடி - நவறி) தவறாகச்செய்வானேயானால், அந்த நாட்டில் (உறை கோடி - பருவக்காலத்தில் இல்லாமல்) மழை பெய்யாதாம்.]

T21213
R004F03

திருவள்ளுவர் கண்ட அரசியல்

(திருநெல்வேலி திருவள்ளுவர் மிஷன் மன்றத்தார் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்றது)

[வே. ர. நாகராஜன், பி. ஏ.,]

"திருவள்ளுவர் கண்ட அரசியல்" இவ்விதம் நாம் சொன்னவுடன் "அது முடியரசா அன்றி, குடியரசா?" என்ற வினா கிளம்புகிறது நேயர்களிடமிருந்து. ஆம்! குடியரசு, முடியரசு, ஜனநாயகம் என்றெல்லாம் அரசியல் தத்துவங்கள் அலசி ஆராயப்படும் இக்காலத்திலே இந்தக் கேள்வி எழுவது இயற்கைதான். நாட்டைக் குடியரசாக்கி நாளும் அத்தத்துவத்தின் அருமை பெருமைகளைக் கண்டு வரும் நமக்கு இந்த வினா கிளம்புவது இயல்புதான். நாமும் விடையிறுக்கிறோம்.

வள்ளுவர் பெருந்தகை கண்ட அரசியல் குடியரசன்று; அப்படியாயின், முடியரசா? அன்று, முடியரசும் அன்று! பின் அது எந்த வகையைச் சேர்ந்ததோ? அது குடியரசாகிய முடியரசு! 'இதென்ன வேக்கையாக விருக்கிறதே?' என்று பார்க்கிறீர்களா? 'கீரியையும் பாம்பையும் ஒன்றாகச் சேர்த்து இணைப்பதுபோலிருக்கிறதே!' என்று பார்க்கிறீர்களா? ஆம், வேடிக்கைதான், விவரம் தெரியும் வரையில்!

வள்ளுவர் கண்ட அரசியலில் முடி சார்ந்த மன்னன் உண்டு. அங்ஙனமாயின் அதை 'முடியரசு' என்று கூறிவிடலாமே? கூறமுடியாது! அந்த மன்னன் மக்களுக்காக வாழும் மன்னன். முடியாட்சிதான்; ஆனால் குடிகளுக்காக. முடியரசன் குடிகளின் அரசன். குடி அரசாள்கிறது. முடியரசின் உருவிலே! அதை "குடியரசாகிய முடியரசு" என்று ஏன் கூறக் கூடாது?

'மக்களுக்காகவே மன்னன்' என்பது வள்ளுவருடைய அரசியலின் அடிப்படை. மக்களின் மன்னன் அன்பால் ஆட்சி புரியக் கடைமைப்பட்டவன்; ஆயுதத்தாலல்ல. அன்பாட்சி இருந்தால் ஆயுதந் தாங்கவேண்டிய அவசியமே ஏற்படாதே! வள்ளுவர் கூறுவதைப் பாருங்கள் :—

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்"

'குடியரசு' என்று மார்தட்டிக் குண்டாந்தடிகளாலும்-துப்பாக்கிக் குண்டுகளாலும்—கண்ணீர்ப் புகையாலும்—காக்கிச்சட்டையாலும்—அரசாட்சி நடத்தும் இன்றைய அரசாங்கங்களோடு இந்தத் தத்துவத்தைப் பொருத்திப் பார்க்கவேண்டும்.

மக்களோடு மன்னன் வைத்துக்கொள்ளும் தொடர்பிலிருந்து அவனுடைய நல்லாட்சி நன்றாக விளங்கும். வள்ளுவர் கண்ட செங்கோல் மன்னவன் மாநிலம் புகழ வாழ்வது இந்த உண்மையை அவன் அறிவதால்தான். அவன் உணர்ந்திருக்கிறான்,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன்
அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"

என்ற உண்மையைப் 'பார்க்க நேரமில்லை' என்று சொல்லிப் பட்டாக்கத்தியை உருவும் இன்றையப் பாராள்வோர் இதைப் பார்த்திடட்டும்.

அரசுகோல் கோடினும் அவனிடமுள்ள அச்சத்தினால் ஆட்சிமுறையைப் பழிக்காது மக்கள் வாளாயிருக்கலாம், ஆயினும் இயற்கை அவனைச் சும்மாவிடாது. இதையும் வள்ளுவர் கண்ட மன்னன் உணர்ந்தவன்:

"முறைகோடி மன்னவன் செய்யின்
ஒல்லாது வானம் பெயல்" [உறைகோடி

ஆம், "மாரி பொய்ப்பினும் வாரிகுன்றினும்......காவலர்ப்பழிக்கு மிக் கண்ணகல் ஞாலம்" என்பதை உணர்ந்தவர் அக் காவலன்.

சரி, மன்னவன் நல்லாட்சி செய்பவன்தான் – ஆனால் அதற்குத் துணையாக வேறு சில வசதிகள் தேவை. இந்த விஷயத்தையும் வள்ளுவர் மறந்துவிடவில்லை; விரிவாகக் கூறுகிறார். சந்தர்ப்பத்திற் கேற்ப நாம் சுருக்கமாகப் பார்ப்போம். முதன் முதலாக, நாடாளும் மன்னனுககு நல்லியல்பாக அமையவேண்டியவை நான்கு :

"அஞ்சாமை யீகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு"

எங்கே அச்சம் இருக்கிறதோ அங்கே உண்மை இருக்காது. உயிருக்காக அஞ்சி, உடைமைகள் போகுமோ என்று பயந்து வாழும் மனிதன் பொய்யை அடைக்கலமாக அடைகிறான். பொய்யைப் புகலிடமாகக் கொண்ட மனிதன் தன் மக்களை நேர்வழியில் ஆள இயலாது; அவர்களுக்கு உண்மையான நீதியை வழங்க முடியாது. ஆகவேதான் 'அஞ்சாமை வேண்டும் அரசனுக்கு' என்றார் வள்ளுவர். கொடைத்திறமில்லா மன்னன் குடிகள் மாட்டு அருளுள்ளங் கொள்ள இயலாது. ஆகவே ஈகையை வற்புறுத்தினார். அறிவில்லாமல் எதுதான் நடக்கும்? ஆதலால் அரசனுக்கு அறிவு தேவை. அறிவின் பயனை அலைக்கழிக்காது துய்க்க வைப்பது ஊக்கம். ஆதலால் ஊக்கம் வேண்டும் ஊராளும் மன்னனுக்கு.

ஆனால் மன்னவன் தன்னுடைய அறிவு, ஊக்கம் முதலியவற்றிலேயே எப்போதும் நம்பிக்கை வைப்பது என்பது கூடாத செயல். வயது, அநுபவம், அறிவு இவற்றிலே மன்னவன் குறைந்தவனாக இருக்கலாம். அல்லது சில சமயங்களில் அவன் அறிவு தப்பான வழியிற் செல்லலாம். ஆகவே அவன், அறிவும் அநுபவமும் சான்ற பெரியோர்களுடைய துணையைக் கூடியமட்டும் மேற்கொள்ளவேண்டும் :

"அறனறிந்து மூத்த அறிவுடையார்
கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"

இவ்விதம் பல்வகை உதவிகளையும் பெறும் மன்னன் செய்யவேண்டிய செயல்கள்தான் என்ன? அவை நான்கு. முதலாவதாக மன்னவன் பொருள் வரும் வழிகளை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். நாட்டைக் காக்கவும் செயல் பல ஆக்கவும் பொருள் தேவையாயிற்றே? சரி, பொருள் கிடைக்கிறது; அது கிடைத்தால் மட்டும் போதுமா? அது கண்ட கண்ட வழிகளிலெல்லாம் செலவழிந்து விட்டால் முயற்சியும் வீண், பொருளும் நஷ்டம், தீமை கூட உண்டாகலாம். ஆகவே கிடைத்த பொருளைச் சேர்த்து வைக்கவேண்டும். மூன்றாவதாக, சேர்த்ததைக் காக்கவேண்டும். இறுதியாக, அங்ஙனம் காக்கப்பட்ட செல்வத்தை நல்வழிகளில் பகுத்துச் செலவு செய்ய வேண்டும். இதைத்தான் வள்ளுவர்,

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

வந்த பொருளை வகையறியாது வாரி விட்டுப் பின் எதிர் வரும் மக்களுக்குக் கைவிரிக்கும் இன்றைய அரசாங்கத்தார் இந்தக்குறளை ஐம்பது தடவை பாராயணம் செய்யவேண்டும்.

அரசன் செய்யும் செயல்களுக்குச் சதா உடனிருந்து உதவி புரிய ஒருவர் தேவை. அவர்தான் அமைச்சர். நாடாட்சியிலும், அதைவிடச் சிறப்பாக, நாட்டைப் பகைவனிடமிருந்து காக்கும் முயற்சியிலும் அமைச்சர் அரசனுக்கு உறுதுணையாக நிற்க வேண்டியவர். இதை வள்ளுவர் பெருந்தகை அழகாகக் கூறுகிறார் :

"பிரித்தலும் பேணிக் கொளலும்
பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு."

(11-ம் பக்கம் பார்க்க)

வள்ளுவர் வழிப்பயணம்

'திருவிழு'

[முன் சுருக்கம்:—முந்திய இரவினை நண்பர் வீட்டில் கழித்து, விடிந்த பின் ஆசிரியர் தமது பயணத்திற்கு ஆயத்தமானார். வீட்டாரின் வேண்டுகோட் கிணங்கி காலை விருந்துண்டார். சிற்றுண்டி முடிந்த பின்னர் விருந்தின் சிறப்பினைப்பற்றியும் வந்த விருந்தினரை அன்புடன் நடத்தும் அவர்களின் நற்பண்பினையும் பாராட்டினார். நேரம் அதிகமானதுகண்டு புறப்பட்டு விட்டார்.]

அன்று தங்கி இருந்த ஊர் நல்ல வளமை நிறைந்த பகுதியினைச் சார்ந்த தென்பது ஆசிரியருக்குத் தெரியும். நீர்வளமும் நிலவளமும் பொருந்திய அப் பகுதியில் வாணிப செழிப்பும் நிறைந்திருந்தமையால் அந்தப் பக்கமே உயர்ந்த வாழ்க்கை முறையில் ஒருவாறு மக்கள் இருந்து வர வசதியுண்டென்ற எண்ணத்தினால் ஆசிரியர் அறவுரைப் புகட்டுதற்கு நல்ல சிறந்த இடங்கள் என்றே எண்ணியிருந்தார்.

இந்தப்படியான, மக்கள் முன்னேற்ற எண்ணங்களை எண்ணிக்கொண்டே ஆசிரியர் பொன்னாறு பக்கத்திற்கு வந்து சேர்ந்தார். பொன்னாறு என்பது அவ்வூரின் வட பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கும் நல்ல ஆறு ஆகும். திருவிழாக் காலங்களில் மக்கள் உல்லாசமாக அங்குப் போவதும் உண்டு. நன்கு அகண்டு நிறைய தண்ணீர் போய்க்கொண்டிருக்கும் பொன்னாறு பார்ப்பதற்கு அழகாகவும் வியப்புறும்படியாகவும் இருக்கும். ஆழம் நிறைந்த ஆறு ஆனபடியால் அந்த ஆறில் தோணிகள் விட்டு மக்கள் அதைக் கடந்து செல்லுவதும் உண்டு.

அந்த ஆற்றின் கரையோரமாகத்தான் ஆசிரியர் வந்து சேர்ந்தார். அடர்ந்திருந்த சோலைகள், ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் இவைதான் ஆற்றின் இருபுறங்களிலும் இருக்கும் இயற்கைக் காட்சிகள். கரையோரமாக, உயர்ந்திருந்த மரமொன்றின் அருகாமையில் நின்றுகொண்டு ஆற்றின் பரந்து தோன்றும் காட்சியினைப் பார்த்த வண்ணம் இருக்கும்போதே ஆசிரியர் நாட்டம் தொலைதூரத்தில் ஏதோ ஒன்றின் மீது சென்றுவிட்டது. ஆம்; அங்கே ஒரு தோணி - அதில் இரண்டு மூன்று ஆட்கள் இருப்பது போலவும் தென்பட்டது.

அசைந்து அசைந்து போகின்ற தோணி, ஆற்றின் அலைகள் மோதுகின்ற நிகழ்ச்சி; உயர்தல், தாழ்தல், சாய்தல், அசைதல் அனைத்தும் காணப்படுகின்ற அந்தத் தோணியின் மீது ஆசிரியர் கவர்ச்சி கொண்டு, ஏதோ ஒரு குறிப்பிட்ட திசை நோக்கிக் கொஞ்சம் விரைவுடனும்சென்று கொண்டிருந்த அந்தத் தோணி, ஆற்றினை வேகமாகக் கடந்துகொண்டிருந்ததைக் கவனித்தார். எப்பக்கமும் ஊன்றிப்பிடிக்கும் வசதியில்லாததுதானே அந்தத் தோணி! இருப்பது ஆறு; ஆழம்நிறைந்தது; தண்ணீர் ஓடுகின்றது. 'அந்தரம்' என்று சொல்லுவார்களே அதுவே போன்றுதான் அந்தத் தோணியின் நிலையும் இருக்கின்றது.

கரைபோய்ச் சேரும் வரையிலும் என்ன உறுதி இருக்கின்றது என்று தானே கூறுதல் வேண்டும்! தோணியின் போக்கினைத்தான் கண்டு கொண்டிருந்தார் என்றாலும், ஆசிரியர் உள்ளம் ஆழ்ந்த பல சிந்தனைகளுக்குள் சுழன்று கொண்டே இருந்தது. யாதொரு பாதுகாப்பும் இல்லாமல், மேலே வானம்—கீழே தண்ணீர் அக்கம் பக்கங்களில் என்ன இருக்கின்றது? ஒன்றும் இல்லைதான்! அப்படிப்பட்ட போக்கில் சென்று கொண்டிருக்கின்ற அந்தத் தோணி, நீர்க்குள்ளிருக்கின்ற பாறையொன்றில் மோத நேரிட்டால் என்ன ஆகும்? அந்தோ! தோணி கவிழ்ந்து மறைந்தழிந்து விடுமே! தோணி உடைந்து உள்ளே சென்று விடும்! அவ்வளவுதான்.

தண்ணீர்மீது மிதந்து செல்லுகின்ற தோணிக்கு அப்படிப்பட்ட தாக்குதல்-பாறை மோதுதல் ஏற்பட்டால், அவ்வளவு தானே நிலை!

இக்கருத்தினை மனதில் வைத்துக் கொண்டார் நமது ஆசிரியர்! 1. அக்கம் பக்கம் பாதுகாப்பு என்னும் பிடிப்பில்லாத தோணி 2. தண்ணீர்மீது மிதந்து செல்லுகின்றது. 3. பாறை தாக்குதல் (ஏற்படுதல் என்று வைத்துக்கொண்டால்) என்ன ஆவது? அப்படிப்பட்ட, நிலையற்ற வாழ்க்கை நடத்தி வருகின்ற பஞ்சைகளான பிச்சைக்கார மக்களை நினைக்கின்றார் ஆசிரியர். அத்துடன் மட்டுமல்ல, அவ்வளவு வழியின்றி-முயற்சிவிட்டு-இப்படியான பிச்சைக்காரத்தனமாகிய அவனுடைய பிச்சையில் பாறைகள் குறுக்கிட்டால் அந்தப் பிச்சைக்கார வாழ்க்கை இடிந்து உடைந்து அவனும் என்ன ஆவானோ! இப்படியான நுணுக்கமான சில கருத்துக்களை ஆசிரியர் வெளியிட்டு விடுகின்றார்.

இரவு (வறுமை, தரித்திரம்) என்கின்ற தோணியானது (ஏமாப்பு) அதாவது யாதொரு துணையும் ஆதரவும் இல்லாமல் சென்றுகொண்டிருக்கும்பொழுது, அப்படிப்பட்ட பிச்சைக்காரனாயிற்றே-அந்தோ-என்று உள்ளம் இரங்காமல், தன்னிடத்தில் இருப்பதில் கொஞ்சம்கூட உதவிசெய்ய மனமில்லாத பாவியாகிய கருங்கல் மனத்தினைக்கொண்ட பாறை போன்றவர்களைச் சந்திக்கும்பொழுது, அவன் (பிறரை எதிர்பார்த்து வந்தவனுடைய உள்ளம்) உடைந்து விடுகின்றதே என்ற அரிய அழகான அமைப்பில் அவ்வளவு கருத்துக்களையும் வைத்து அமைத்துக் காட்டவேண்டிய, நல்ல சிறிய ஒரு குறட்பா செய்து வைக்கின்றார்.

> இரவு என்னும் ஏமாப்புஇல் தோணி
> கரவு என்னும்
> பார்தாக்கப் பக்த விடும்.

அந்தத் தோணி பிளந்துவிடுமே (பக்கு விடும்) என்கின்ற எண்ணத்தில் கொண்டு போய் நிறுத்திய ஆசிரியரின் உள்ளம் உலக வாழ்க்கையில் கருங்கல் படைத்த பாறை போன்றவர்களையும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் ஆசிரியரின் எண்ணங்கள் ஒருவாறு நின்றுவிட்டதாக இல்லை. ஆற்றின் ஓரமாக நடந்துகொண்டே போகின்றார். பெரிய ஆறல்லவா? எத்தனையோ தோணிகளையும் கண்டுகொண்டே செல்லுகின்றார்.

வாணிபமும் செழிப்புற்றுள்ள ஊர்கள் பக்கத்தில் அந்த ஆறு போய்க்கொண்டிருந்ததால் அதனையொட்டி மரக்கலங்கள் ஏராளமாகச் சென்றுகொண்டிருந்ததை ஆசிரியர் புரிந்துகொண்டார்.

அப்படிப்பட்ட மரக்கலங்கள் பல போகின்ற காட்சி ஒரு புது எண்ணத்தினை ஆசிரியருக்கு உண்டாக்கிவிட்டது.

(தொடரும்)

நன்றி!

பொங்கல் நன்னாளில், அன்புபெருக்கத்தில் தோய்ந்த நல்வாழ்த்துரைகளை 'குறள் மலர்' அன்பர்களும், பொதுமக்களும் அருள்கூர்ந்து உளங்கனிந்து அனுப்பித் தந்துள்ளார்கள். அனைவர்க்கும் எனது நெஞ்சுகந்த நன்றியறிதலினை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

— ஆசிரியர்.

தவறு என்ன ?

[தி. மா. பரமசிவம், திருச்சி]

"தமிழ் இலக்கியங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளனவா? இலக்கியப்பற்று ஏற்பட்டால், அதனால் அன்றாட வாழ்வு பயனுடையதாகுமா?"

"இலக்கியங்கள் மனிதர்களை முன்னேற்ற விடாமல் தடுத்துவரும் கொடுமையாளர்கட்குத்தான் பயன்படும். ஏழைக்கு - உழைப்பவனுக்கு இலக்கியம் தேவையில்லை" என்று சிலர் சொல்லுகின்றனர்.

அறிவு வளர்ச்சிக்கு இலக்கியம் வேண்டுமே தவிர, அறியாமை மிகுவதற்கல்ல. இக் கருத்து உதித்த எவரும் வாழ்வுக்கு ஒவ்வாத ஏடுகளை ஏற்றுக் கொள்ளாததில் தவறு என்ன?

'நீர்மேற் குமிழி' என்றும், 'மின்னல்' என்றும், வாழ்க்கையை அடியோடு தாழ்த்திக் கொண்டோம், இக் கருத்துக்களைக் கொண்ட இலக்கியங்களையே பயின்று, "என் செயலாலாவது யாதொன்றுமில்லை, இனித் தெய்வமே உன் செயலே" என்று மனிதச் செயல்களைக் கண்ணுக்குப் புலனாகாதவைகளிடம் ஒப்படைத்து விட்டோம்.

கொடுமைப்பட்ட மக்கள், உரிமை விழைகின்றபோது - அதே கொடுமைப் பட்ட மற்றவன் "என் தலையில் இன்னபடி என்று எழுதிவிட்ட சிவன் செத்து விட்டானோ? முட்ட முட்டப் பஞ்சமானாலும் பாரம் அவனுக்கு" என்று பாடுகின்றான்.

வாழ்வில் நிலையாமை உண்டு; இதை நினைத்தே எல்லோரும் செத்துவிட முடியாது. நிலையாத வாழ்விலேயே நிலைபெற்ற ஒரு செயலை மனிதன் செய்துவிட வேண்டும்.

திருவள்ளுவர் இல்லை; ஆனால் அவர் செய்த நூலுண்டு. அறிஞர் ஷா இல்லை; அவரது கருத்துக்கள் உலவுகின்றன. இத்தாலி நாட்டு மார்க்கோனி இன்று இல்லை; வானொலி அவரை நினைவூட்டுகின்றது. ஜான்கூடேன்பர்க் என்ற ஜெர்மானிய நாட்டு அறிஞர் இன்று இல்லை; அவர் கண்டுபிடித்த அச்சுக்கலை நமது அறிவை வளப்படுத்துகின்றது.

மனிதனால் எது ஆகவில்லை? எது ஆகாதது? தமிழை அரசுமொழி ஆக்க முடியும் - முயன்றால். மதப்பித்தை ஒழிக்கமுடியும் - எண்ணினால். வறுமையை ஒழிக்கமுடியும் - ஒன்றுபட்டால். பணத்திமிரை அழிக்க முடியும் - அடிவருடும் பழக்கம் நீங்கினால்.

மனிதன் உயர்வுக்கும் தாழ்வுக்கும் 'விதி' காரணமல்ல. எல்லாவற்றிற்கும் மனிதனே காரணம். நல்ல நிலைக்குத் தன்னை ஆக்கிக் கொள்ளுவதும், நிலை அழிந்து தாழ்வதும், மேலும் உயர்ந்து தலைமைபூண்டு வாழ்வதும் மனிதனேதான்.

இக் கருத்துக்களை நாலடியார் என்ற நூலில் வருகின்ற இப்பாடல் உணர்த்துகின்றது.

"தன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலை கலக்கிக் கீழிடுவானும் - நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னை
தலையாகச் செய்வானும் தான்"

இதுபோன்ற வாழ்வியற் கருத்து மிகுந்த நூல்கள் இன்றும் தமிழில் உண்டு. காலத்துக் கேற்ற கருத்துக்களை இலக்கியங்களில் இருந்து பிரித்துக் காட்டி, மக்களுக்குத் தெளிவுண்டாக்கினால் நாடு நலம் பெறும். இன்றேல் இலக்கியங்கள் "பொய்யாய்ப் பழங்கதையாய்ப்" போவதில் தவறு என்ன?

குறள் வழி வாழ்வோம் !

— புலவர் மா. அய்யாவு —
(தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, குளித்தலை, திருச்சி.)

1. பல்வேறு மொழிகளுக்குத் தாயே யாகிப்
பலகாலும் சொற்செல்வம் பெருகிட் டாலும்
எல்லையிலா நல்லழகும் இளமை தானும்
ஏற்றமுறப் பெற்றிருக்கும் "தமிழாம்" அன்னை
நல்லோர்கள் புகழ்ந்தேத்தப் பெற்ற பிள்ளை
நானிலத்தில் வள்ளுவனாய் விளங்கி, அன்னோன்
சொல்லரிய பேராற்றல் விளங்கத் தானும்
சொற்சுவைசேர் குறள்நூலை ஆக்கித் தந்தான்.

2. கடல்கடந்த நாட்டினரும் தமக்கு ஏற்ற
கலையாக்கி மொழிபெயர்த்துப் பயனும் பெற்றார்
அடலார்ந்த தமிழர்நாம் நமக்கு ஏற்ற
அருங்குறளை வாழ்க்கையிலே உணர்ந்தோ மில்லை
தடங்கடல்சூழ் உலகமதில் மக்கள் என்போர்
தக்கமுறை நல்வாழ்வு வாழ்வ தற்கு
அடங்காது மணற்கேணி சுரக்கு மாபோல்
அருங்கருத்தைப் பொழிந்திட்டுப் பிழிந்து தந்தான்.

3. "மனத்துக்கண் மாசிலனேல் அறவோ னாவான்
மகனென்போன் தந்தைக்குப் புகழைச் செய்வோன்
இனமென்போர் துன்பத்தில் பங்கு கொள்வோர்
இன்பமெனல் கடமையிலே காணும் வெற்றி
சினஞ்செய்தல் குடிதனக்கே அழிவைத் தேடல்
சிறியோரைச் சார்ந்திட்டோர் அழிந்தே போவார்"
இனுமிவைபோல் எல்லையிலாக் கருத்தைச் சொல்லும்
இணையற்ற குறள்காட்டும் நெறியே வாழ்வோம்.

4. "அன்பினுடைச் சார்பதனால் யாக்கை பெற்றோரும்
அன்பில்லா உடலென்புக் கூடே யன்றோ?
அன்பதனால் உலகத்தை உயிரை மற்ற
அடங்காத உயிர்களையும் அடக்கக் கூடும்
இன்சொல்லும் பணிவுடைமை ஒழுக்கம் ஆய
இவைபோன்ற பண்புகளைப் பெற்று வாழ்ந்தால்
நன்மகனாய்த் திகழ்ந்திடலாம்" என்று கூறும்
நற்புகழ்சேர் குறள்காட்டும் நெறியே வாழ்வோம்.

5. பண்டிருந்த நந்தமிழர் வாழ்வைக் காட்டும்
பண்பட்ட "இலக்கியமாய்" மற்றும் நாமிப்
புன்பட்ட இழிநிலையி னின்று ஓங்கிப்
புகழ்பெறநல் "லிலக்கணமாய்த்" திகழ்த லோடும்,
திண்மைமிகு நல்லாட்சி முறையைக் காட்டும்
திருந்தியநல் லரசியலின் நூலு மாகி,
வண்டமிழ ரினத்திற்கோர் சமூக நூலாய்
வழங்கிவரும் குறள்காட்டும் நெறியே வாழ்வோம்.

பின்னணி சங்கீதம்

"வீணை"

ஆறவுன்ஸ் பொங்கல்!

பொங்கலோ பொங்கல்! ஆறவுன்ஸ் பொங்கல்! ரேஷன் பொங்கல்! சோளப் பொங்கல்! கீரைப் பொங்கல்! புளியாங் கொட்டைப் பொங்கல்! புண்ணாக்குப் பொங்கல்! பிளாக் மார்க்கட் பொங்கல்! சுதந்திரப் பொங்கல்!

என்று இவ்வாருகப் பல வீடுகளில் — குறிப்பாகக் கிராமப்பக்கங்களில் பொங்கல் பொங்கி வந்த பொழுது மக்கள் ஆரவாரம் மேலிட்டதால் சத்தம் போட்டு ஆர்ப்பரித்தார்களாம், சார்! என்று என்னுடைய நண்பர் சொல்லவந்தார். சொன்னுர்; நான் நம்பவே இல்லை; பொய்யென்று அடித்துப் பேசினேன்! அப்படி மக்கள் சத்தமே போட்டிருக்க முடியாது என்று; ஏன்?

எப்படிச் சத்தம் போட முடியும்! அவனவன்தான், ஆறு என்று பேருக்குச்சொல்லி ஆறரை மூணு, என்று மூன்றவுன்ஸ் சாப்பிட்டு மூச்சு போய்விடுமோ என்று தள்ளாடிக்கிடக்கிற கிராமத்திலே, இவ்வளவு உரக்கவா சத்தம் போட முடியும்? என்னுடைய பதிலைக்கேட்டு நண்பர் திகைத்துப் போனுர்!

சில வீடுகளில் அடுப்பு மேல் புதுப் பானையை வைத்துவிட்டுப் பொங்கி வரும் என்று பார்த்துப் பார்த்து ஏமாந்துவிட்டார்களாம்! பொங்கியே வரவில்லையாம். பிறகு பானைக்குள் எட்டிப்பார்த்தால், அந்த அவுன்ஸ் அரிசி எங்கேயோ பாதாளத்தில் இருப்பது போலத் தெரிந்ததாம். பொங்கி வந்து, பானைக்குள்ளேயே அடங்கிவிட்டதாம்! மக்கள் மனதிற்குள்ளேயே பொங்கி, வேகின்றதைப் போல!

சிலர் வீடுகளில் இரவு எட்டு ஒன்பது மணிக்கு மேல் பொங்கி வந்ததாகக்கூட கேள்வி! ரேஷன் கடைக்குப் போய் அரிசி வாங்கி வரச்சென்ற ஆள் அங்கேயே 'க்யூ' வரிசையில் கரும்பு மாதிரி சாய்ந்து சாய்ந்து நின்று அதிகநேரம் ஆகிவிட்டதாம், ரேஷன் அரிசி வாங்கி வர! வருத்தப்பட்டார்களாம். எத்தனையோ ஆண்டுகளாகப் பகலில் பொங்கிப் பொங்கித்தான் எதை வாரிக் கொண்டார்கள் என்று கேட்கின்றேன். பெருந்தன்மை இல்லாத மக்கள்!

'எட்டடிக் குச்சுக்குள்ளே முருகையா எத்தனை நாளிருப்பேன்' என்று ஒரு சித்தர் விசனப்பட்டுப் பாடினராம். இந்தக் காலத்தில் அந்தச் சித்தர் இருந்தால் அப்படியா பாடி இருப்பார்? 'ஆறவுன்ஸ் அரிசிக்குள்ளே' என்றுதான் அடியெடுத்திருப்பார்! போகட்டும். இப்படியாக மக்கள் அரிசிக்குப்படும்பாடு ஏனே என்றுதான் நமக்குப்புரியவில்லை. நீர்வளம், நிலவளம், பல்வளமும் பெற்றிருக்கின்ற இந்த நாடு இப்படியாகுமென்று யாராவது கனவிலும் அந்தக்காலத்தில் நினைத்திருப்பார்களா?

'கண்ணிற்குத் தெரியும் நிலங்கள் எல்லாம் உழுது பயிரிடப்பட்டுவிடக்கூடாதா? இதனை முதல் வேலையாகச் செய்யக் கூடாதா அரசாங்கம்? பசியும், பட்டினியும் பறந்து போகுமே!' என்று சாதாரண மக்கள் பேசத்தான் செய்கிருர்கள். 'ஆ! அப்படி அரசாங்கத்தைக் குறை கூருதே. ஆட்சியின் நுட்பம் உனக்குத் தெரியாது' என்று வாய் மூட வருகிறதே சட்டம்! நல்ல தை மாதத்தில் மனச் சாந்திக்காவது நல்ல நினைவுகளைப் பற்றிப் பேசக்கூடாதா என்ற ஆசை உண்டாகத்தான் செய்கின்றது!

தமிழ்ப் பெருமக்கள்—இயற்கை உண்மையுடனும், பகுத்தறிவுடனும், நல்ல காரணத்துடனும் கொண்டாடக் கூடிய ஒரு நல்ல நாள் தைப்பொங்கல் நாளேயாகும்.

விதைத்த பயிர்கள் நன்ருக விளைந்து பயனைத்தர, தான் வளர்த்து-தனது முயற்சியால் உண்டாக்கிய உணவுப் பொருளினை அறுவடை செய்து பொங்கல் இட்டு மகிழ்கின்ற நாளல்லவா அது! தன்னுடனே ஒத்துழைத்து, இரவுப் பகலாக வேலை செய்து பயிர்விளையப் பாடுபட்ட மாடுகளுக்கும் நன்றியுடன் அவனுள்ளத்தில் பொங்கி வரும் மகிழ்ச்சியினையும் நன்றியறிதலினையும் காட்ட ஆசைப்படுகின்ருன்.

வருவோர்க்கு வரையறையின்றி வாரி வழங்கும் பண்புபடைத்தத் தமிழன் இல்லத்தில் அந்த நன்னளில் பொங்கல் பொது இடத்தில்—பலரும் அறிய—வெளிப் புறத்தில்தான் பொங்கல் சமைக்கப்படுகிறது. மாடுகளுக்குப் பேயரிட்டு அழைக்கும் அன்பு மனம் படைத்த உழவன், அன்று தானே உள்ளம் பூரிக்கின்ருன்.

பொங்கலுக்கு மறுநாளில் மாடு பிடிக்கின்ற விழா என்று தெற்குப் பக்கங்களிலெல்லாம் இன்றும் கொண்டாடப்பட்டுத்தான் வருகின்றது. அதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகிறது என்ருலும், தமிழனுடைய வீரப் பண்பாட்டினை எடுத்துரைக்கும் அரிய பொருள் கொண்ட காரணமொன்றினையும் அறிய வேண்டியதும் அவசியம்தானே! வீரமறவர்களாக இருந்த பரம்பரையானவர்கள் நாம், என்று நினைத்தாவது கொஞ்சம் ஆறுதல் கொள்ளுவோமே!

தை மாதத்தில்தான் திருமண ஏற்பாடுகளும் செய்து முடிப்பது பெரும்பாலும் தமிழர்களின் பண்பாடாக இருந்திருக்கின்றது. அழகு, அறிவு, செல்வம், கல்வி எல்லாவற்றையும் விரும்பும் பண்பாட்டினை விட மணமகனுக்கு வீரம் வேண்டும், 'மறவனைத்தான் மணந்து கொள்ளுவேன்' என்ற பெரு நோக்கந்தான் தமிழ்ப் பெண்களுடைய குறிக்கோளாகும்.

பொங்கல் கழித்த மறுநாட்களில் மாடு பிடிக்கின்ற விழா வென்று நடைபெறுவதுண்டு. அந்த நிகழ்ச்சியில்தான் மணமகனைத் தேர்ந்தெடுப்பார்களாம்!

உயர்ந்த குன்றின்மீது வேடிக்கை பார்க்கவும், உள்ளக் கருத்துங்கொண்ட மணமாகாத பெண்களும் மற்ற மக்களும் இருப்பார்கள். கீழே, அகன்ற தடத்தில் நல்ல காளை மாடுகளை ஓட விடுவார்களாம். வழக்கமாக மாடுகளின் கழுத்துக்களில் பரிசுகளும் கட்டப்பட்டிருக்கும். வீர இளைஞர்கள் அந்தக் காளைகளைப் பிடிக்க, துணிச்சலுடன், கூரிய கொம்புகளைக் கொண்ட காளைகளுக்கும் அஞ்சாமல், அந்தத் தடத்தின் மத்தியில் ஓடிக் காளைகளைப் பிடிப்பார்களாம்.

குன்றின் மீது நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் பெண்கள், பலம் பொருந்திய காளைகளை குறி வைத்தாப்போலப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். தாங்கள் குறிவைத்துப் பார்த்துக்கொண்டிருக்கின்ற காளைதனை எந்த ஆடவன் பிடித்து இழுத்துக்கொண்டு செல்லுகின்ருனே, 'அவனையேதான் மணப்பேன்' என்று அந்தப் பெண் கூறுவாள், அவனுடைய வீரத்தினைப் பாராட்டி! காளைதனைப் பிடித்து, காரிகையை மகிழ்வித்ததால்தான் அவனுக்கும் காளை யென்று பெயர் வந்தது போலும்!

இவ்வரிய மறவர் பண்பாட்டினை உலகறிய எடுத்துக்கூறும் திங்களாக அமைந்திருப்பதே தைத்திங்களாகும்.

[8ம் பக்கம் பார்க்க]

குறள் மலர்

19-1-51] திருச்சி [வெள்ளி

'ஆறுதல்' மாநாடு!

சென்னையில் ஆறுதல் அளிக்கும் மாநாடு ஒன்று நடைபெற்றிருக்கின்றது. ஆட்சித் தலைவர்களும் பெரும் உத்தியோக அதிகாரிகளும் தனிப்பட்ட முறையில் மக்களுக்கு நாள் தோறும் ஆறுதல் சொல்லிவந்தார்கள்; சொல்லியும் வருகின்றார்கள்.

ஆறுதல் என்பது அவசரப் படுபவர்கட்குத்தான் பயன்தருவதாக இருக்கலாமேயன்றி, அவதிப்படுகின்றவர்கட்குப் பயன்படும் என்று நம்மால் கூறமுடியவில்லை. சோறில்லை என்று துக்கப்படுகிற நாட்டிற்கு 'ஆறுதல்' எத்தனை நாட்களுக்குத் துணை செய்யமுடியும்? உடனடியாகச் செய்யமுடியுமா, என்று மட்டும் நம்மை அச்சுறுத்திக் கொண்டிருப்பது நல்லதல்ல.

சென்றவாரம், ஜில்லா கலெக்டர்கள் மாநாடு சென்னையில் நடைபெற்றதாக அறிந்தோம்; உணவு நிலைமையினைப் பரிசீலனை செய்தார்களாம்! செய்யட்டும்!

வீடு பற்றி எரியும்பொழுது, உண்ணுதல், உறங்குதல், பேசுதல், பாடுதல், ஆடுதல், இன்ன பிற அனைத்தையும் மறந்துவிட்டுத் துடிதுடித்து நெருப்பினை அணைக்க ஒன்றுபட்டு எல்லோருமாக, எல்லா வேலைகளையும் புறக்கணித்து முயற்சிக்கின்றோமல்லவா?

அதுவே போலத்தான், நாட்டில் உணவு நெருக்கடி வந்து, மக்கள் பசிப்பிணியால் வாடி மடியும் தருவாயில் திண்டாடுகிறார்கள் என்றால், மந்திரிகளும் அரசாங்கமும் பிறவேலைகளையும் ஓரளவு ஒதுக்கிவைத்துவிட்டு உணவுப்பிணியை ஒதுக்குவதையே தலையான கடமையாகக் கொண்டிருப்பார்களேயானால், இத்தனைத் துன்பம் உணவு நிலையில் ஏற்பட்டிருக்காது என்றே கூறுவோம்.

இன்று அரசாங்கம் உணவு நிலையில் பொறுப்பெடுத்துக் கொள்ளுவது அந்த முறையில் இல்லையே; நாட்டில் செய்ய வேண்டிய பலவிதக்கடமைகளில் உயிர்ப்பொருளாகிய உணவுக் கொள்கையினையும் ஒன்றாக வைத்திருப்பது முறையாகுமா என்றுதான் கேட்கின்றோம்.

அதனால்தான் நடைமுறையில்-விரைவில் பயன் ஏற்படாமல் ஆறுதல் அறிக்கைகள் விடுகின்ற நிலையில்தான் இன்று காலம் இருந்து வருகின்றது.

செய்கையில் அதிமுக்கியம் என்று எண்ணினால்தானே நன்மை உண்டாகமுடியும்? இந்திய உதவி உணவு மந்திரி கனம் திருமல்ராவ் அவர்கள் 'உணவு நிலையில் ஏதாவது மாறுதல் ஏற்படுமா?' என்று கேட்ட கேள்விக்கு 'உண்டாகும்-இல்லை' என்ற இரண்டில் ஏதாவது ஒரு பதில் கூறமுடியாமல், 'எனக்குத் தெரியாது' என்று கூறிஇருக்கின்றார். அப்படி இருக்கின்றது உணவுபற்றி மந்திரிமார்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற கவலை!

ஆனால் ஆறுதலாகவும் ஒன்று கூறியிருக்கின்றார்; 'சென்னையில், அரிசி ரேஷன் மேலும் குறையாது' என்று துணிந்து (!) கூறி இருக்கின்றார். இதனால் அரசாங்கம் இன்னும் குறைத்துவிடுதற்கும் நினைக்குமோ என்ற ஐயப்பாடு நமக்குத் தோன்றத்தானே செய்யும்?

இப்பொழுது மக்களுக்குக் கொடுக்கப்படுவதே ஆறு அவுன்ஸ். 'இது குறையாது' என்று இப்பொழுது உறுதி கூறிவிட்டார் என்றால், கடந்த ஓராண்டுக்கு மேலாக, நமக்கு ஆறுதல் கூறிவந்த ஆட்சியாளர், குறைத்துக்கொண்டே போகாமல் இருக்க முயற்சி எடுத்துப் படாதபாடுபட்டு வருகிறார்கள், பாவம்! என்று எண்ணும்படித்தான் இருக்கின்றதேயல்லாமல், சிறிதளவுகூட அதிகப்படுத்த வழிதேடவில்லை என்றுதானே தெரிகிறது? ஆதலால்தான் ஆறுதல் கூறும் வேலையேதான், இவர்களுக்குப் பெரிதாகிவிட்டதே அல்லாமல், அரிசி அதிகம்பெற வழிதேடித்தர வகையில்லாதவர்களாகி விட்டார்கள்என்றேதான் பொருள் கொள்ளவேண்டி இருக்கின்றது.

இது ஒருபக்கம் இருக்க நமது நாட்டுத் தலைவரான காமராஜ் அவர்கள் ஏதாவது சொல்லிக் கொண்டிருக்காமல் இருக்கமுடியாதவராகப் போய் அவர் பேசுவதைக் கேட்டால், வயிற்றெறிச்சலில் சிரிக்கவேண்டிய நிலைமைதான் ஏற்படுகிறது.

"உணவுப் பற்றாக் குறைக்குக் காரணம் திராவிட இயக்கமும், முஸ்லீம் லீகுமேயாகும்" என்று காமராஜ் பேசி இருக்கின்றார். எதை நினைத்துக்கொண்டு எதையாவது பேசிக்கொண்டிருப்பதா? கட்சியின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கண்டித்துக் கொண்டிருப்பதைத் தங்கள் வேலைகளில் முக்கியமானவொன்றாக வைத்திருக்கவேண்டியதுதான். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. உணவு நெருக்கடியினைப் போக்க வழி ஏதாவது, தமது அறிவுக்குப் பட்டதைக் கூறத் தெரியாமல், கட்சிகளைக் காட்டிப் பேசினால் பொதுமக்கள் மனம் எவ்வாறு கொதிப்படையும் என்று கேட்கின்றோம்.

"சுதந்திரம் அடைந்ததும் பல நாடுகள் நமது நாட்டைவிட

அதிகக் கஷ்டப்பட்டிருக்கின்றன"—திரு. காமராஜ் வார்த்தைகள். ஆதலால் நாம் படும் துன்பங்கள் அவ்வளவு பெரிது அல்ல என்று ஆறுதல் கூறுகிறார். உணவுத் துன்பத்தினை உடனடியாகப் போக்க வழி தெரியவில்லை! ஆறுதல்மேல் ஆறுதல் மொழிகள்தான் நமக்கு அரிசி மாதிரி வந்துகொண்டிருக்கின்றன.

'இந்தியாவின் உணவு மந்திரியின் சங்கநாதம்' என்று பத்திரிகைகள் சென்றவாரம் கூறின. 'உணவு வந்துவிட்டது' என்ற சங்கநாதம் அல்ல; "இந்தியாவுக்கு ஆபத்து ஏற்பட்டால் கடைசி மூச்சு உள்ளவரையில் எதிர்த்து நிற்போம்" என்று வீரவுரை கூறிவிட்டார். இப்படியாகப் பேசக் கேட்டுக் கேட்டுக் நமக்குக் காதுகள் புளித்துவிட்டன என்றுதான் கூறவேண்டும். காரியத்தில் ஒன்றும் காணோமே!

உணவுரேஷன் சம்பந்தமான சில முடிவுகள் இம்மாதம் பத்தொன்பதாம் தேதி வெளியிடப் படும் என்று கனம் முன்ஷி அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதுவும் நன்மையானதாக இருக்க முடியுமா என்று நினைக்க முடியாததாகத்தான் இருப்பதாகத் தோன்றுகிறது! ஆனால், வழக்கம்போல் கூறும் ஆறுதல் வார்த்தைகளை அவர் மறக்கவில்லை! "மக்கள் ஒத்துழைப்பு வேண்டும்; அதிகம் உற்பத்தி செய்யுங்கள்; கொஞ்சமாகச் செலவு செய்யுங்கள்" என்னும் அறவுரை தந்துள்ளார்கள். அதிக உற்பத்தி என்பதை ஓராண்டாகக் கூறியும் அதிக உற்பத்தி ஏற்படவில்லையே என்றால், அதற்கும் காரணம் மக்கள்தானா? ஏன் அதிக உற்பத்தி ஏற்படுத்த முடியவில்லை என்பது தெரியாமலா இருக்கின்றது? 'பருவ மழை இல்லையே' என்று அதற்கும் பதில் சொல்லிவிடுகின்றார்கள்.

இப்படியே, அப்படியும் இப்படியுமாகக் காரணங்களையும், சாக்குப் போக்குகளையும் கூறிக் கொண்டே போனால், இவர்களின் முயற்சிதான் என்னவோ என்பது நமக்குப் புரியவில்லை!

ஏதோ சிறு இன்னல், என்று இருக்காமல், உணவு நெருக்கடியைப் போக்குவதற்கு, ஏற்கனவே பல திறப்பட்ட அலுவல்களில் இருப்பவர்களைக் கொண்டே சமாளித்துவிடலாம் என்று எண்ணுவதும் அவ்வளவு நன்மையினைக் கொடுக்காது என்பதே நமது கருத்தாகும்.

உணவு நெருக்கடியினைப் போக்கும் தனிப்பட்ட (Special) குழு ஒன்றினை ஏற்படுத்தி, அவர்கட்கு வேறு எந்தவித அலுவலுமே இல்லாதபடி, உணவு அதிக உற்பத்தி-கள்ளமார்க்கெட் விலக்கு-பதுக்கி வைப்போர் சோதனை-ரேஷன் முறை குறைபாடு-விலைக் கட்டுப்பாடு முறைகள்-ஆகிய இவைகளை மட்டும் கவனித்துவரும் முழுவேலைகளில் ஈடுபடச்செய்து பார்ப்பார்களேயானால், அரசாங்கம் அதி விரைவில் நன்மையை எதிர்பார்க்க முடியும் என்று கூறுகின்றோம்.

வேறு பல வேலைகளையும் வைத்துக்கொண்டிருக்கின்ற அதிகாரிகள் தான் இன்று உணவு நெருக்கடியினைப் போக்கவும் தங்கள் நேரத்தில் ஒரு பகுதியினைச் செலவிட்டு வருகின்றனர். இது போதாது என்றே கூறுவோம்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்ற வள்ளுவனரின் பொன்னுரைகள் செய்யவேண்டிய செயல்களை உடனே செய்யுமாறு தூண்டுமென்று நம்புகின்றோம்.

இராமலிங்கம் அழைக்கிறார்!

ஒடிந்த உள்ளத்திற்கு உண்மை கூறி — ஊக்கமளித்து — ஒழுக்கம் காட்டி — உள்ளொளி உணர்த்தும் இராமலிங்க அடிகளாரின் இன்ப நினைவு நாள் அடுத்த வாரம் தமிழகமெங்கும் கொண்டாடப்பட இருக்கின்றது.

'வாரீர் இன்பம் பெற' என்று வளமார்ந்த செஞ்சொற்களால் வருந்திக்கூறி வாழ்க்கையின் வழிகாட்டியான வள்ளலாரின் அருள்மொழி சுரக்கும் அன்புத் திருநாளைப் பொன்னே போல், கண்ணெனப்போற்றும் நன்னாள் நமக்கு நல்லறம் அளிப்பதாகுக!

அடிகளார், அறவுரை தந்த அறிவுப் பெரியாராக வள்ளுவப் பெருந்தகையின் அறிவுச் சுரங்கத்தின் மின்னொளிரும் அருங்குறளறங்களை எடுத்துக்காட்டி 'இன்புற வாருங்கள்' என்று தமிழகத்தின் மூலம் உலகிற்கே ஒரு பெரும் தனிச்சுடராக விளங்கினார்கள்.

பக்திப் பாதையில், பகுத்தறிவென்னும் பளிங்குக் கற்களைப் பதித்து, பசிப்பிணி போக்கும் பணியொன்றினையே, ஆதிப்பகவனை வணங்கும் பயனாகக்கொள்ளல் வேண்டும் என்று பரிவுடன் கூறிக் காட்டியவர்கள் ஆவார்கள்.

பசிப்பிணியினால் வாடும் இன்றைய நிலையில் அடிகளார் இல்லையே என்று ஏங்குகின்றோம்.

வெளிச்சம்போட்டுப் பாமரமக்களை எய்த்துத்திரியும் பாதகர்கட்கு உண்மையான அருள் வெளி ஒளியாம் ஜோதியின் அற்புதத்தினை மெய்ப்பித்தார்கள்.........

நல்ல செல்வ நிலையில் இருந்த ஒருவன், காலக்கடுமைகளில் சிக்கிச் சிதறுண்டு வறுமையாளனாகப் போய்விட்டான். ஆறுதல் கூறுவாருமில்லை; அண்டிப் பிழைக்கலாம் என்றாலோ, அருகழைத்து அணைத்துப் பேச வருவாருமில்லை. இந்நிலையில் வாழ்க்கை நடத்தி வந்தார்.

தன்னுடன் இருந்த ஒருவன் பணக்காரனாகி, அவன் வீட்டில் ஒரு முறை பெரிய கல்யாணம் நடந்ததாம். காலையில், பணக்காரன் வீடானதால் பெரிய பெரிய மனிதர்கள் போல் இருப்பவர்கள் எல்லாம் போய் வந்தார்களாம்.

இந்தப் பழைய பணக்காரனை வறுமையாளனும் அழுக்கு நிறைந்த உடையுடன்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வீட்டிற்குப் போக நினைத்தான். போனான், கூப்பிடுவாரில்லை; அழைத்துக் கவனிப்பார்கள் இல்லை; விரட்டவும் செய்தார்கள் அங்கிருக்கும் ஆட்கள்! வெளியே வந்து விட்டான்!

மாலையில், இரவலாக உடைகளை வாங்கி அணிந்துகொண்டு, வெளிச்சம் போடும் ஆசாமிகள் போல, உடுத்திக்கொண்டு கால்களில் நல்ல அழகான சோடுகளை அணிந்துகொண்டு சென்றான்.

புதுமாதிரியான பணக்காரன் போல வேடம்போட்டுக்கொண்டு போனானல்லவா?

எல்லோரும் 'வருக! வருக!!' என்று அழைத்து, உட்கார வைத்துத் தாம்பூலம் வழங்கி பழம், பூ, எல்லாம் கொண்டுவந்து முன்னே வைத்து 'எடுத்துக்கொள்ளுங்கள்' என்று கூறினார்களாம். 'எனக்கு வேண்டாம் இவைகள்' என்று அந்தப் பழைய பணக்காரன் கூறி காலில் இருந்த இரண்டு சோடுகளையும் கழற்றி, முன்னேவைத்து "இவைகளுக்குக் கொடுங்கள்" என்று கூறினானாம். ஏன்? அவைகள் இல்லாமல் வந்தபொழுது காலையில் அவனை யாருமே மதிக்கவில்லை! இப்பொழுது அவனுக்கு மதிப்புக் கொடுக்கச் செய்தவை அவைகள் தானே!

அப்படிப்பட்ட அற்ப உலகமாயிற்றே இது! இந்த உலகத்தினை முன்னே நிறுத்திவைத்துக்கொண்டு பற்பல அரிய நயமான முறைகளில் நமது வள்ளலார் இனிய உரைகள் தந்துள்ளார்கள். யாரோ ஒருவர் அடிகளாரைக் கலியாணத்திற்கு வந்தருள வேண்டியபொழுது, அடிகளார்,

"சோடில்லை, மேல்வெள்ளை சொக்காயில்லை, நல்ல சோமனில்லை, பாடில்லை, கையில் பணமில்லை ......"

அடிப்படையான அழுக்ககற்றும் நல்லுரைகளைப் பக்குவமாக உணர்த்தினார்களாம்!

ஞானம், கல்வி, நல்லொழுக்கம், ஈகை அன்பு, அறம், தூய்மை - இன்னபிற அத்தனையையும் அருள் நெறியில் அளித்துதவிய அடிகளார் வழியில் தமிழுலகம் பயன் அடைவதாகுக!

அருட்பா தந்த அருந்தமிழ் முனிவரான இராமலிங்கனாரின் நன்னாளைப் போற்றித் தமிழ் மண்ணில் பிறந்த ஒவ்வொரு தமிழரும் விழா கொண்டாடி பணியாற்றுவோமாக!

தொடர்ச்சி

அறத்துப்பால்] 3 [நீத்தார் பெருமை 8

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

[நிறை மொழி - (பொருளும் கருத்தும் ஆற்றலும்) நிறைந்திருக்கின்ற சொற்களைக் கூறக் கூடிய, மாந்தர் - முனிவர்களாகிய மக்களுடைய, பெருமை - சிறப்பினை, நிலத்து - இவ்வுலகில், (அவர்களுடைய) மறை மொழி - அருள் மொழிகள் (உடனே பயனளிக்கக்கூடிய சொற்களே) காட்டி விடும் - உணர்த்திவிடும்.]

விளக்கம் :—நிறை மொழி மாந்தர்களாகிய முனிவர்களுடைய பெருஞ் சிறப்பினை அவர்களுடைய மறை மொழிகளால் உண்டாகும் நிகழ்ச்சிகளே காட்டிவிடும் என்பதே குறிப்பு.

நிறை மொழி என்பதும் மறை மொழி என்பதும் சிந்திக்கத்தக்கனவாகும். ஆற்றல் நிறைந்த முனிவர்களிடம் வருவன என்பதைக் குறிக்கும் பொருட்டு நிறை மொழி என்றும், அந்தச் சொற்கள் உடனுக்குடனே உலகில் செயல் முறைகளை நடத்துகின்ற ஆற்றல் கொண்டவைகள் என்பதைக்கூறும் பொருட்டு மறை மொழி என்றும் கூறி விளக்குவராயினர். நிறை மொழிகள் உடனுக்குடனே பயனளித்து விடக் கூடியவைகளாகும்.

வெகுண்டு (கோபித்துக்) கூறினாலும், அல்லது அருள் பூண்டு கருணை நிறைந்து வந்தாலும், அந்தச் சொற்கள் அந்தந்த முறையே பயனைத் தருவனவாகும்.

'நீத்தார் பெருமை,' என்ற இவ்வதிகாரத்தில், ஆற்றல் பெற்ற - முற்றுந் துறந்த - அந்தணத் தன்மை நிறைந்தவர்களைப்பற்றிக் கூறிவருகின்ற முறையில் சொற்களின் வன்மை எடுத்துக்கூறப்பட்டது. மனத்தின் (உள்ளத்தின்) உரமும், அறிவும், தூய்மையும், உறுதியும் கொண்டவைகள் ஆனபடியால் மறை மொழிகள் பயன் தருவனவாம்.

ஆறவுன்ஸ் பொங்கல்!

[5ம் பக்கத் தொடர்ச்சி]

தனது குழந்தையினை முதன்முதலாகப் பார்க்கச்செல்லும் தமிழ்மறவன், வீரஉடை தரித்து, போர்க்கோலம்தாங்கி, போருக்குச் செல்லும் ஆயுதங்கள் கொண்டவனாகித் தான், தனது காதலி பெற்றுத்தரும் குழந்தையினை இருகையேந்தி வாங்கிக்கொள்ளுவான், ஏன்? தந்தை போல் மகனும் போர்வீரனாகப் புகழ்தாங்கவேண்டும் என்ற ஆசையினால்!

மறவர் பண்புநிறைந்த தமிழர்கள் - எண்ணியதை எண்ணியபடியே அடையமுடியும் என்று வீரம்பேசிய தமிழர்கள் - போர் என்றால் பூரிக்கும் தோள்படைத்த தமிழர்கள் இன்று மூடப் பழக்கவழக்கங்கட்கு அடிமையாகிக் கிடக்கின்றனரே என்று எண்ணும்பொழுது துக்கிக்கவேண்டித்தான் இருக்கின்றது.

கர்ப்பவதியாக இருக்கும்பொழுது, தான் படுத்துறங்கும் அறைமுழுதும் சிவப்புறக் கண்ணாடிகள் புதைக்கப்பட்டு எப்பக்கம் பார்த்தாலும் இரத்தம்போன்று நிறம் தெரியும்படியான அந்த அறையில்தான் அப்பெண் இருப்பது வழக்கமாம். உறங்கும் பொழுதும், உறங்கி விழிக்கும்பொழுதும் - பார்ப்பதும், நினைப்பதும் அப்படிப்பட்ட சிவப்பு (குருதி போன்ற)நிறமாகவே இருப்பதால், அந்த நினைப்பு, தாயின் உள்ளத்தில் உறைந்திருந்தால், பிறக்கின்ற குழந்தையும் அந்த எண்ணம் படைத்ததாகிவிடுமாம்!

அப்படிப்பட்ட நிறம், இயற்கையாகவும் சர்வ சாதாரணமாகவும் உண்டாகிவிட்டால், பிற்காலத்தில் போர்க்களத்தில் குருதி வெள்ளத்தினைப் பார்த்தாலும், யாதொரு திகைப்போ, மலைப்போ உண்டாகாமல் இயற்கையானவொன்றாக இருந்துவிட—வெற்றி வீரனாகத் தமிழன் மிளிருவான் என்பதே தமிழன் கருத்து. இத்தகைய வீரப் பண்பாட்டினை நினைவுபடுத்தும் வீரர் நாளே தைப்பொங்கல். இந்நாட்களில் இத்தகைய உயர் பண்பாட்டினை தமிழகம் எங்கணும் நாம் கண்டு மகிழ வேண்டியதாகும்.

நல்ல பதில்!

இன்றைய ஆட்சியில் கோளாறுகள் அதிகப்பட்டு மக்கள் படும் அவதி சொல்ல முடியாதவாறு போய்க்கொண்டிருக்கின்றது என்ற செய்திகள் நாள்தோறும், இமய அடிவாரம் முதல் கன்னியாகுமரி முனை வரை வெளியாகிக்கொண்டே வருகின்றன.

இப்படி ஆட்சியாளரைக் குறைகூறிக்கொண்டே இருப்பது சரியல்ல என்பது தான் நமது கருத்து!

இக்கருத்தினை விளக்கிக்காட்டி மக்களுக்கு எடுத்துக்கூறி அருமையான பதில் ஒன்றினை, ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் நல்லபடியாகச் சொல்லி இருக்கின்றார்.

“ஆட்சி நல்லபடியாக இல்லையென்றால், பொதுமக்கள் நல்ல முறையில் நடந்துகொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். ஆட்சி புரிவோர்களும் பொதுமக்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகள்தானே! மக்களிடத்தில் நேர்மையும், ஒழுங்குமுறைக் குறைபாடுகளும் ஏற்பட்டுவிடுமேயானால், ஆட்சியும் அப்படித்தான் ஆகிவிட நேரிடும். மக்கள் சோம்பேறிகளாக இருந்தால், ஆட்சி மட்டும் எப்படி சுறு சுறுப்பாக இருக்க முடியும்? ஆட்சி நல்லதோ, கெட்டதோ, எல்லாம் மக்களைத்தான் பொறுத்திருக்கின்றது”

எதிர்த்துப் பதில்சொல்ல முடியாதவாறு, பிரசாத் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்! அப்படியானால் நல்ல ஆட்சியாக இருக்கவேண்டுமே என்று கவலைப்படுகிறவர்களுக்கு இனி எது வழி?

பிரசாத் குறித்துக் காட்டிய சுருக்கம் தெரிந்து விட்டது. இனி ஆட்சியிடமிருந்து எதையும் எதிர்பார்த்து வேண்டிக்கொண்டிருக்க இடமில்லை. எல்லாம் பொதுமக்களின் குறைபாடுதான்! ஆட்சியை இனிக் குறை கூறிக்கொண்டிருக்கவே முடியாது!

‘அரிசி கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்களே! இதனை அரசாங்கம் கவனிக்கக் கூடாதா?’

பதில்:—அரிசி நல்லபடியாகக் கிடைக்கும் மார்க்கத்தில் மக்கள் நடந்துகொள்ளவில்லை, அதனால்தான் அரிசி கிடைக்காமல் இருக்கின்றது. ஆட்சியாளர் என்ன செய்வார்கள்?

“தென்னாட்டிலிருந்து வடநாட்டிற்கு எல்லா நூலையும் ஏற்றுமதி செய்கின்றனர். தென்னாட்டுக் குடும்பங்கள் வேலையின்றிப் பட்டினியால் சாகின்றனவே, இதனை ஆட்சியாளர்கள் கவனிக்கக் கூடாதா?”

பதில்:- வடநாட்டிற்கு நூல்போகாமல் தடுக்கப் பொதுமக்களுக்குப் போதிய சுறுசுறுப்பும் ஆற்றலும் இல்லை. அதற்கு அரசாங்கத்தார் என்ன செய்வார்கள்? ஏன் குறை கூறுகிறீர்கள்?

வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பதில் வரும்! ஏதோ ஆட்சித் தலைவர்களுக்குப் பதில் சொல்லத்தெரியவில்லையென்று பொதுமக்கள் தலைவர்கள் இதுவரை சொல்லிப் பார்த்தார்களே, இனி மேல் என்ன செய்யமுடியும்?

“கொடுக்கிற கொஞ்சம் ரேஷன் அரிசியில் முக்கால்பங்கு கல்லாக இருக்கிறதே?”

பதில்:- கல்லில்லாமல் இருக்கப் பொதுமக்கள் வழிசெய்துகொள்ளவேண்டும். அரசாங்கம் என்ன செய்யமுடியும்?

என்னே அருமையான பதில் முறைகள்! ஆ! ஆ!! ஆ!!! ... ...

தொடர்ச்சி

பொருட்பால்] 3 [கல்லாமை 8

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

[நல்லார்கள் - நல்ல கற்றறிந்த அறிஞர்களிடத்தில், பட்ட - உண்டான (இருக்கின்ற) வறுமையின் - வறுமையினைவிட (தரித்திரத்தைவிட) இன்னாதே - துன்பத்தைக்கொடுப்பது; (எதுவென்றால்) கல்லார் கண் - கல்லாத அறிவிலிகளிடத்தில், பட்ட - இருக்கின்ற திரு - செல்வமாகும்.]

விளக்கம்:—கற்றறிந்த அறிஞர்களிடத்தில் இருக்கின்ற வறுமையினைவிட மிகத் துன்பத்தைக்கொடுப்பது, கல்லாத மூடர்களிடத்தில் இருக்கும் செல்வம் (என்பதாம்)

வறுமை, துன்பத்தைக் கொடுப்பதென்பது இயற்கைதான். வறுமை, தன்னை உடையவனுக்கு மட்டும் துன்பத்தைக் கொடுப்பதன்று, அவனால், பிறர்க்கும் துன்பம் உண்டாகும்படி செய்வதுமாகும்.

அப்படிப்பட்ட வறுமையானது கற்ற நல்ல அறிஞர்களிடத்தில் இருக்குமேயானால் துன்பத்தைக்கொடுக்காது என்பதாம். ஏன்? நல்லார் என்று குறட்பாவின் சொல் சிந்திக்கத்தக்கது.

வறுமை, கல்வியும், அறிவும், ஒழுக்கமும், நற்குணமும் நிறைந்த நல்லவர்களிடத்தில் உண்டாகுமேயானால் அது ஒரு போதும் துன்பத்தினைக்கொடுத்து கெடுக்க முடியாது என்பதாம். மற்றவர்கட்கும், நல்லார்கள் தமது வறுமைக்காலத்தும் துன்பத்தைக்கொடுக்க நினைக்கமாட்டார்கள்.

ஆனால், கல்லாத அறிவிலிகளிடத்தில் செல்வம் இருந்துவிட்டால், அவன் மனம் போன போக்கில் நடப்பவனானபடியால், அச்செல்வத்தினால் தானும் துன்பப்பட வழிசெய்துகொள்ளுவான். அதுமட்டுமல்ல; மற்றவர்க்கும் துன்பம்கொடுப்பான்; அவன் கல்லாதவன் ஆனபடியால் என்று அறிக.

இன்னாது - துன்பம்தருவது: கல்லாதவனுடைய இழிதன்மை நன்கு விளக்கப்பட்டது. செல்வத்தினால் நல்ல இன்பத்தையும் கல்லாதவன் அடையமுடியாது என்பதாம்.

தஞ்சையில்

பொங்கல் விழா பொதுக்கூட்டம்

நாள் 21-1-51 (ஞாயிறு)
காலம்: மாலை 6 மணி
தலைவர்: திரு. கோ. ஆளவந்தார் அவர்கள்,
பேச்சாளர்: ‘குறள் மலர்’ ஆசிரியர், திரு. திருக்குறள் முனிசாமி அவர்கள்,
இடம்: திலகர் திடல்

அனைவரும்வந்தருள வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
இராசகோபாலன்
செயலாளர்,
த. தி. க. செயலாளர் தஞ்சை.

ஆசிரியருக்கு

ஆசிரியருக்குத் தனிப்பட்ட (Private) கடிதங்கள் எழுதவிரும்புவோர், திருக்குறள் முனிசாமி, திருக்குறள் அச்சகம், கடலூர் (என். டி.) என்ற முகவரிக்கு எழுதவும்.

கண்டுபிடிப்புகள் !

மேனாடுகளில் விஞ்ஞானிகள் எதேதோ கண்டுபிடிக்கின்றார்கள் என்று நாள் தோறும் அறிந்து வருகின்றோம். ஆனால் நம்மவர்களும் அவர்களுக்கு மட்டமில்லை என்றுதான் நாம் சொல்லுவோம்.

அங்கே மேனாட்டார் என்றால், இங்கே கீழ்நாட்டம் கொண்டவர்கள் கண்டுபிடுக்கின்றார்களாம். அப்படிக் கண்டுபிடிப்பதைத் தங்கள் தொழிலாகவே கொண்டு இருக்கின்றார்களாம்.

நன்றாக உடுத்திக்கொண்டு, உண்டு, போகவர நல்லவசதிகள் வைத்துக்கொண்டு புகழ்நிறுத்தி, மற்றவர்கள்கண்டு பெருமைப் படும் படியாக வாழும் ஒருத்தரை எடுத்துக் கொள்ளுவோம். அப்படிப் பட்டவரை அடிக்கடி பார்த்தால் நல்ல மனதுடையவர்கள் மகிழ்ச்சி யடைவார்கள். தீய மனம் உடையவர்கள் பொறாமை யடைவார்கள். ஆனால், கீழ்த்தரமான — கயமைக் குணம் படைத்தவர்கள் ஏதாவது கண்டு பிடிப்பார்களாம் !

அப்படி - மேலே கூறியவாறு - பலரும் போற்ற, அறிஞராகவும்,புகழுடையராகவும் நன்றாக உண்டு உடுத்து வாழ்பவர்களைப் பார்த்தால் கீழ்த்தரக் கயவர்கள் அவர்கள் மீது ஏதாவது குற்றம்-குறை (உண்மையிலேயே இல்லாதிருந்தாலும்) வேண்டுமென்றே கண்டு பிடிப்பார்களாம்! என் அப்படி அவர்கள் செய்யவேண்டும் என்றால், அது தான் கயமைக் குணத்திற்கு அடையாளம் என்றறிக! குற்றம் கண்டு பிடிப்பதில் பெரிய வன்மை படைத்தவர்களாகவும் வேலை செய்வார்களாம், இப்படிப்பட்ட கயவர்கள், "என்னடா — அவர் நன்றாக நற்குணம் படைத்து — ஒழுக்கமாகத்தானே வாழ்கின்றார். அவர்மீது என் குறை கற்பித்துக் கேவலமாகப் பொய்யான வார்த்தைகளைச் சொல்லல் வேண்டும்?" என்றெல்லாம் நினைக்கவே மாட்டார்களாம் அந்தக் கயவர்கள். நாம் நடை முறையில் பேசுவோமே, "மற்றவர் பச்சையாக இருந்தால் இவன் கண்ணிற்குப் பிடிக்காது" என்று அப்படிப்பட்டவர்கள் கயவர்கள் !

இரண்டு நண்பர்கள் போகும் பொழுது ஒருவன் "எனக்குப் பசி அதிகமாக ஆரம்பித்து விட்டது" என்றானும். 'என்னடா திடும் என்று சொல்லுகிறாய்' என்றான் மற்றவன். "இதோ காபி கிளப்பைப் பார்த்துவிட்டேனே!" என்றானும் மேற்படி ஆள். எப்படி இருக்கிறது கதை !

நன்றாக இருப்பவரைப் பார்த்துவிட்டால் "ஐயோ, இவர்மீது ஏதாவது குற்றம் கண்டுபிடித்து கேவலப்படுத்த வேண்டுமே" என்று கயவன் மனம் துடி துடிக்குமாம்!

உடுப்பதூம் உண்பதூம் காணின்
வடுக்காண வற்றாகும் கீழ். [பிறர்மேல்

தொடர்ச்சி

காமத்துப்பால்] 3

[புணர்ச்சி மகிழ்தல் 8

வீழும் இருவர்க்கு இனிதே வளிஇடை
போழப் படாஅ முயக்கு

[வளி - காற்று, இடை - (காதலனும் காதலியும் தழுவும்பொழுது) இடையே-மத்தியில், போழப்படா - செல்லமுடியாதவாறு, முயக்கு - முயக்கம், (இறுகத்தழுவக்கூடிய தன்மை) வீழும் - விரும்பிக் காதலித்த இருவர்க்கும், இனிதே - இன்பம் தரக்கூடியதாகும்.]

விளக்கம் :—காதலனும் காதலியும் புணர்ச்சியின்பத்தில் இருவரும் தழுவும் பொழுது இருவர்க்குமிடையே காற்றுப் புகாதவாறு இறுகத் தழுவுதல், அவ்விருவர்க்கும் மிகுந்த இன்பத்தினைக் கொடுப்பதாகும் என்பதாம்.

புணர்ச்சி மகிழ்தல், என்ற இந்த அதிகாரத்தில், அவ்வின்பத்தின் சிறப்பினால் காதலன் எண்ணுகின்ற இன்ப எண்ணங்களைக் கூறிவந்த ஆசிரியர் இந்தக் குறட்பாவினால் புணர்ச்சி செய்தல் என்ற நிகழ்ச்சியில் நடைபெறவேண்டிய நுட்பமான உண்மை ஒன்றினை எடுத்துரைத்துவிட்டார்.

வளி என்றது மெல்லிதான - மிகச்சிறிய காற்று என்பதாகும். அதுவும் புகுதற்கு இடமில்லாதவாறு (முயக்கம்) தழுவுதல் இருக்கவேண்டுமென்றதால், இறுகத் தழுவுதல் என்பது வெளிப்படைஆயிற்று. அன்பின் பெருக்கம் இன்பத்தழுவுதலில் அடங்கியுள்ளதென்றறிக.

சிறு காற்றும் இருவர்க்குமிடையேயும் போகாதவாறு தழுவுதல் இருத்தல்வேண்டும் என்பதைக் குறித்துணர்த்தவே, வளி இடை போழப்படா முயக்கு என்று கூறினார். 'நெகிழ்தல்' என்பது இருத்தல் கூடாது என்பதே கருத்து. நெகிழ்தலாவது, தளர்தல் என்று பொருள்படும். முயக்கத்தில் (தழுவுதலில்) நெகிழ்தல் இருத்தலாகாது. நன்கு இன்பம் பெற்ற காதலன் கண்டறிந்ததைக் கூறினான்.

வேதநாயகம்!

[தமிழிசைக் கலா வல்லுநர் திரு. சரவணபவானந்தர், மாயூரம்.]

(25-வது இதழ் தொடர்ச்சி)

5 நேரான வாழ்வும் நிலையான செல்வமும்
தாராள உள்ளமும் தந்தருள்வாய்!—சீராரும்
மூவேந்தர்க் காதி முடிசூட்டும் ஓர்குடியின்
கோவே! அருள்கருணை கூர்ந்து!

6 கூர்ந்து கவனிக்கில் கொங்குடைய ராயரினைச்
சார்ந்து வருமரபில் தான்வந்தோய்!—ஆர்ந்தபுகழ்
என்றும் நிலைத்திடவே ஏற்ற வரம்பெற்றாய்
நன்றுநன்று சாலவும் நன்று!

7 நன்றே! என்ஜீவ நதியே! நளினகுணக்
குன்றே! இசைபேசுங் கோகிலமே!—வென்றிநிலை
நாட்டும் திருமதுர நாயகரை நேரியமுப்
பாட்டனெனப் பெற்றாய்ப் பயன்!

8 பயனுடைச் சொல்லே பயின்று கடவுள்
நியமங்கோ ணாது நிலைத்த—தயவுடையாள்
மன்னும்ஆ ரோக்ய மரியின் தவப்பயனாய்ப்
பொன்னாய்ப் பிறந்தாய்இப் போது!

[வளரும்]

திருவள்ளுவர் கண்ட - - அரசியல்

(...2-ம் பக்கத் தொடர்ச்சி)

...ின் பகைவருக்குத் துணையா
...வரிடமிருந்து பிரித்த
...துணையானவர் தம்
... வண்ணம்
... தவறித் தம்
...ிரிந்து போய்
... தம்மரசரோடு
...லலமை யுடைய
... என்று வள்ளுவர்
...மைச்சருக்கு எவ்வளவு
... வள்ளுவர் என்பது நன்கு
...து.

'ராஜ தந்திரம்' என்றும் 'அரசியல் சூத்திரம்' என்றும் பலவிதமாக இன்று வழங்கப் பெறுவது அமைச்சரின் இத் தகைய திறமைதான். இரண்டாவது உலகப் போரின் ஆரம்பத்திலே ருஷ்யா தேசம் ஜர்மனியோடு சேராமல் தன்னோடு சேரும்படிச் செய்ய இங்கிலாந்து ஸர். ஸ்டாபோர்டு கிரிப்ஸை மாஸ்கோவுக்குத் தூதனுப்பித் தன்னெண்ணத்தில் வெற்றி பெற்றது இந்த அரசியல் தந்திரத்தால் தான்.

இவ்வளவு தகைமை பொருந்திய அமைச்சருக்குச் சொல் வன்மை இன்றி யமையாதது. எத்தனையோ குறைகளை மறைத்து எவ்வளவோ நிறைவை யளிப்பது நாவன்மைதான். இந்த நாவன்மையால் நாட்டின் பகைவரைக்கூட, தம் விரோ தத்தை மறக்கச் செய்யலாம். நாவன்மை அவ்விதம் பகைவரையும் பிணிக்கும் தகையதாக இருக்கவேண்டும்.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க்
கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

"கிரேக்க தேசத்தில் எதென்ஸ் நகரைப் படையெடுத்துப் பிடிக்க நினைந்த பகை யரசனும் பிலிப் என்பான் - மகா அலக்ஸாந் தரின் தந்தை - எதென்ஸ் நகரிலிருந்த டெமாஸ்தனீஸ் என்பவரின் பேச்சுத் திறமையைக் கண்டு பேச்சு மூச்சற்று வியந்து பாராட்டினன். அவருடைய சொல்லம்புக்கு அஞ்சி எதென்ஸை அடக்க வும் முடியாமல் தயங்கித் தவித்தான்" என்று சரித்திரம் கூறுகிறது.

அமைச்சரைப் போலவே ஒற்றரும் ஒரு நாட்டரசனுக்கு மிக்க துணையாயிருப்பவர். 'ஒற்றர் வாயிலாகப் பகைவர் செய்யும் எல்லாவற்றையும் மறைவாக அறிந்து அவற்றால் அடையக்கூடிய பயனை ஆராயாத அரசன், வெற்றியடைய வேறு வழியில்லை' என்று வள்ளுவர் கூறுகிறார்:

"ஒற்றினுன் ஒற்றிப் பொருள் தெரியா
மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்"

ஒற்றருக்கு முக்கியத்துவத்தில் எள்ளள வும் குறைந்தவரல்ல தூதுவர். தம்மரசன் மாட்டன்பும், அவனுக்கு ஆவதை அறியு மறிவும், சொல்லின் பயன் தெரிந்து அத னைச் சொல்லுந் திறமையும் தூது பேசு வார்க்கு இன்றியமையாத குணங்கள் என்று வள்ளுவர் கூறுகிறார்:

"அன்பறி வாராய்ந்த சொல்வன்மை
தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று"

அதுமட்டுமா?

"தொகச் சொல்லித் தூவாதநீக்கி நகச்
நன்றி பயப்பதாந் தூது" [சொல்லி

ஔவை கிழவி தூது சென்றது நமக்குத் தெரியுமல்லவா? "அமுதின் இனிய சொற் கிழவி" தன்னுடைய அற்புதமான நகைச் சுவையால் எவ்வளவு மகோந்நதமான காரியம் செய்தாள்!

சரி, தூதுவராலும் ஒற்றராலும் பகை யரசரைப் பற்றியும் அவர் நாட்டைப் பற்றியு மறியலாம். ஆனால் தன் நாட் டைக் காத்துக்கொள்ள வேண்டுமே? அதற்காகத்தான் வள்ளுவர் சொல்கிறார், நாட்டிற்கு நல்லணியாக அரண் வேண்டு மென்று.

அரண் எப்படியிருக்கவேண்டும், தெரியுமா?

"கொளற் கரிதாய்க் கொண்டகூழ்த்தாகி
[அகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்"

எதிரி பிடித்தற்கரியதாய்ப், பல்வகை யுணவுப் பொருள்களையுந் தன்னகத் துடையதாய், உள்ளிருந்து போர்புரிவோர் எளிதாக நின்று இயங்குதற்குரிய அமை வுடையதாயிருப்பது அரணாகும்.

அரண் இருக்கிறது; ஆனால் அரணையும் அரசனையும் ஆன்ற மக்களையும் காப்பது படைதான். 'நல்லபாம்பு மூச்செறிந்தவு டன் பகையெலிகள் பதறியோடுவதுபோல், பெரும்படையைக்கண்ட பகைவர் சேனை பயந்து ஓடிவிடும் என்று திருவள்ளுவர் சொல்கிறார்:

"ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்"

இயற்கையிலேயே வீரமிக்க சேனையை யுடைய அரசனுக்கு நட்பின் துணை வேறு கிடைத்துவிட்டால், அது இன்னும் மேலானது:

"செயற்கரிய யாவுள நட்பின்
அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு"

சரி, படை இருக்கிறது; நட்பின் துணை இருக்கிறது; போர் தொடுத்து விடலாமா? கூடாது. செய்யுஞ் செயலின் திறம், தன் ஆற்றல், எதிரியின் வலிமை, தன் துணைவர் வலிமை இவ்வெல்லாவற்றையும் ஆராய்ந்து தான் வினை தொடங்கவேண்டும்:

"வினைவலியும் தன்வலியும் மாற்றான்
வலியுந்
துணைவலியும் தூக்கிச் செயல்"

இந்நால்வகை வலியும் உணர்ந்தாலும் செய் யும் வினைக்குரிய காலத்தையும் உணர வேண்டும். முள்ளையுடைய மரத்தை அது சிறியதாயிருக்கும்போதே பிடுங்கி எறிய வேண்டும். இல்லாவிட்டால் அது முதிர்ந்து களைவாருடைய கையை வருத்தும். அதைப்போலவே பகைவரை யொடுக்குவதும் தக்க தருணத்தில் செய்து விடவேண்டும். பகைவர் பலம் பெருகும் வரைக் காத்திருந்து பின்னர் போருக்குச் செல்லல் அறியாமை.

"இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து"

நல்லது; இவ்விதமாக அரசன் அஞ் சாமை போன்ற அருங் குணங்களாலும், பெரியோர் துணையாலும், படை, அமைச்சு, நட்பு, அரண் முதலிய பல்வித உதவிகளா லும், தன் நாட்டையும் தன் நாட்டு மக்களை யும் காக்கவேண்டியது அவன் கடமை.

ஆனால் குடிகளுக்கு ஒருவிதமான கடமை களும் இல்லையா? உண்டு, அவர்களுக்குக் கடமை உண்டு; அதுதான் நல்லாட்சி செய் யும் மன்னனுடன் நாளும் ஒத்துழைப்பது.

அரசர் நமக்கிளையர், உறவினர் என்றெல் லாம் எண்ணாது அவரது அதிகார நிலைக் குட்பட்டு நடக்கவேண்டும்:

"இளையர் இனமுறையர் என்றிகழார்
நின்ற
ஒளியோ டொழுகப் படும்"

மக்களுக்காக வாழும் மன்னனை உலகம் மதித்தே தீரவேண்டும்:

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில
மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

இதுகாறும் நாம் கண்டவற்றினின்று ஓர் உண்மை தெளிவாகிறது — அதாவது வள்ளுவர் கண்ட அரசியல் ஓர் ஐக்கிய அரசியல்; மன்னன்—மக்கள் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டது. அன்பின் பிணைப்பிலே இயங்குவது; அதிகாரத்தில் அசைவதல்ல. சமரசத்தில் பிறப்பது; சண்டையில் முளைப்பதல்ல. ஆம்! அது "உலகத்துக்கு ஒரு புதுமையான" அரசியல்.

—

இன்பம் வளர...

—சாமி

இன்பம் வளர வேண்டும் என்றுதான் நாம் எந்த நேரத்திலும் எண்ணிக்கொண் டிருக்கின்ருேம்; மனித இயற்கையும் அதுவேதான்! துன்பம் இல்லாமலேயே இருக்க வேண்டும் — துன்பம் வந்தாலும் கொடிப்பொழுதில் மறைந்துவிடக்கூடாதா என்றுதான் துடிக்கின்றது உள்ளம். துன்பம் வேண்டாம், இன்பம் வேண்டும் என்று இருப்பதுதான் எல்லோருடைய கருத்தாகும். ஆனால் உலக இயற்கை — வாழ்க்கையின் இயல்பு அப்படிப்பட்டதல்ல. இன்பமும் துன்பமும் வந்து வந்து போய்க் கொண்டிருக்கும். இக் குறிப்பினை வைத்துக்கொண்டுதான் நல்ல விளக்கம் தருகின் றனர் அறிஞர்கள்.

ஒருவனுக்குத் துன்பம் வந்துவிட்டால் அது நீங்குவதற்கு என்னசெய்யவேண்டும்? தக்க முயற்சிகள் எடுத்து துன்பநிலையினைப் போக்கிக் கொள்ளவேண்டும், போக்கிக் கொள்ளுகின்ருன் என்பதெல்லாம் எல் லோரும் அறிந்ததே ஆகும்.

ஆனல் அப்படிப்பட்ட துன்ப நிலையில் இருக்கும் ஒருவனுடைய மனதில் உண்டா கும் துன்ப எண்ணங்களை எப்படிக் குறைப் பது என்பதுதான் கேள்வி. அதற்கு வழி யாவது யாது என்பதனைத்தான் பேசுகின் ருேம்.

துன்பப்படுகின்றவன் தன்னுடைய துன்ப உள்ளத்தில் இருந்து, அந்தத் துன்ப பாரம் (சுமை) குறையவேண்டு மென்ருல் யாது செய்வது? உண்மையான உள்ளன் போடு கூடிய தன்னுடைய தோழர்களிடத் தில் அத்துன்ப (தன்னுடைய) நிலையினை வெளியில் எடுத்துக் கூறவேண்டும். அப் படிச் சொல்லச்சொல்ல, அவனுடைய துன்பவேதனை குறைந்துகொண்டேவரும். "உன்னுடைய குறையைச் சொல்லப்பா" — "என்னுடைய குறையைக் கொஞ்சம் கேளப்பா" என்று உலக வழக்கில் பேசுவ துண்டு. குறை யென்ருலே ஒருவனுடைய உள்ளத்தில் உள்ள துன்ப நிலை என்று பொருள். அந்த துன்ப நிலை — வேதனை —பிற நல்ல உண்மைத் தோழர்களிடத்தில் சொல்லச்சொல்ல குறைவதால்தான், அதற்குக் குறையென்றே பெயர் வந்தது.

துன்பப் படுகின்றவன், தன்னுடைய துன்பக்குறையினைத் தானேதான் பிறரிடத் தில் எடுத்துக்கூற வேண்டுமே யல்லாமல், அப்படித் துன்பப் படுகின்றவனிடத்தில் போய் மற்றவர்கள் "என்னப்பா, உனக்கு அதிகமான இடைஞ்சல் வந்துவிட்டதாமே, எனக்குக்கூட மிகவும் வருத்தமாகத்தான் இருக்கின்றது..." என்பது போலக் கேட் டுக்கொண்டிருக்கக் கூடாதாம். அப்படி ஒவ்வொருவராகப் போய், துன்பப்படுகின்ற — வேதனையிலிருக்கின்ற ஒருவனைக் கேட் டுக்கொண்டிருந்தால், அவனுடையவேதனை அதிகப்பட்டு விடுமாம். ஆதலால்தான், துன்பப்படுகின்றவன் பிற நல்ல அன்பர் களிடத்தில் தன்னுடைய குறைகளை எடுத் துக்கூற துன்பவேதனை குறைந்துவருமாம்.

இன்பம் எப்படி வளரும்? ஒருவன் பெற்றிருக்கின்ற இன்பம் அவனுக்கு எப்படி பெரும் மகிழ்ச்சியினை உண்டாக்கும் என்பதனைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஒருவனுக்கு ஒருநல்ல நன்மை — செல்வப் பெருக்கம் உண்டாகிவிடுகின்றது என்று வைத்துக்கொள்ளுவோம். அந்தச் செய்தி — நிகழ்ச்சி அவனுக்கு இன்பமாகத்தான் இருக்கின்றது. ஆனல் அந்தப்படியான இன்பம் அவன் உள்ளத்தில் வளர வேண்டு மானல் அதற்கு முறை — வழி யாது என்பதனைத் தெளிவாகத்தெரிந்துகொள்ளு தல் வேண்டும். இன்பவாய்ப்பு ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டால், அந்தக் கருத்தினை, அந்த இன்பம் பெற்றிருக்கின்ற அவனே பிறரிடத்தில் போய் சொல்லிக்கொண்டிருக் கக்கூடாது; அது அற்பத்தனமுமாகும். அவன் அடைந்த வெற்றி — இன்ப வாய்ப் பினல் அவன் மேலும் மேலும் பெரிய இன்பம் வளரும்படி இருக்கவேண்டு மென் ருல், மற்றவர்கள் அப்படி இன்பம் பெற் றிருப்பவனைப் போய் கேட்கவேண்டுமாம். "என்னப்பா, உனக்கு நல்ல வெற்றி கிடைத்து விட்டதாமே?" என்று போய்க் கேட்டால் அவனுக்கு இன்பம் வளரும். இன்பம் பெற்றவன் தானே போய்ச் சொல் லிக்கொண்டிருக்கக்கூடாது. தன்னுடைய மகன் சிறந்த அறிஞனக இருக்கின்ருன் என்பதை அறிந்த தாயானவளுடைய உள் ளத்திலிருக்கும் பெரிய இன்பம், மற்றவர் கள் வந்து அவளிடத்தில், தன்னுடைய மகனின் பெருமையினை எடுத்துக்கூறவும், அதனை அவள் காதினல் கேட்கும்பொழுது தான், இன்பம் வளருகின்றது அவளுக்கு என்பதனை, ஆசிரியர் வள்ளுவனர் "தன் மகனைச் சான்ருேன் எனக்கேட்ட தாய்..." என்ற குறிப்பினல் அமைத்துக் காட்டியுள் ளார்.

இன்றைய உலக வாழ்க்கையில், ஒருவன் வெற்றிபெற்ற பொழுது, மற்றவர்கள் அவ னிடம் பாராட்டிப் பேசுவதோ, அவன் பெற்ற இன்பத்தில் தாம் மகிழ்ச்சி யடைவ தாகக் கூறுவதோ இல்லை — ஏன், பொரு மையினல்!

மற்றவன் துன்பப்படும்பொழுது, அவ னிடம் வேண்டுமென்றே சென்று அவன் துன்பத்தினை அவனிடத்திலே எடுத்துப் பெருக்கிக்கூறி அவன் வேதனையை அதிகப் படுத்துவது; இது செய்யத்தகாதது. இப் படிச் செய்வது கயமைக் குணமாகும். உன்னுடைய துன்பத்தைப் பிறரிடத்தில் சொல்; உன்[illegible] இன்பத்தினைப் பிறர் சொல்லக்கேள்; நீயே போய் சொல்லிக் கொள்ளாதே!

நீயனே! தெரிகிற

மெய்சொல்லிச்

பொய்சொல்

பொய்சொல்லும

மெய்சொல்லி வாழ விரும

பிறர்பொருளில் இச்சைவைத்து
பேதை மனமே
அறநெறிக் கொவ்வா அநீதி - நிறைந்த
செயல்புரிய வேண்டாம் தினையள வேனும்
நயமுறப் பாரில் நட.

நீங்கள் 'குறள் மலர்' சந்தாதாரரா?

Editor: **Thirukkural V. Muniswamy;** Publisher: N. Ganapathy; Printed by V. Manickam Pillai at the Imperial Press, No. 1, Big Kammala Street, Tiruchirapalli.